வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

FWC

தவணைப் பரீட்சை, மார்ச் - 2019

Term Examination - March - 2019

தரம் :- 13 (2019)	இந்து நாகரிகம்	நேரம் :- இரண்டு மணித்தியாலம்

பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. அதர்வண வேதம் கொண்டுள்ள காண்டங்கள்.
   1) 10 2) 731 3) 20 4) 6000 5) 18

2. இருக்கு வேத பாடல்களை இயற்றியோர்களைக் குறிக்கும் தொகுதி.
   1) வாமதேவர், அத்திரி, வசிட்டர் 2) பரத்துவாசர், வியாசர், விசுவாமித்திரர்
   3) அத்திரி, ஸ்ரீகண்டர், வசிட்டர் 4) விசுவாமித்திரர், வாமதேவர், கபிலர்
   5) வியாசர், அத்திரி, தாசர்

3. உருத்திரனுக்கு பல திருநாமங்களைக் கூறி வழிபடும் முறையைக் கூறுவது.
   1) சாமவேதம் 2) காயத்திரி மந்திரம் 3) திருமந்திரம்
   4) சுக்கிலயசூர் 5) கிருஷ்ணயசூர்

4. அதிகமான சைவ சித்தாந்த சிந்தனைகளைக் கொண்ட ஆகமங்கள் அடங்கும் தொகுதி
   1) காமிகம், வாதுளம், தீப்தம் 2) சிந்தியம், காரணம், கிரணம்
   3) அஜிதம், விஜயம், மகுடம் 4) விமலம், சுப்பிரபேதம், சூக்குமம்
   5) கிரணம், ரௌரவம், பௌஷ்கரம்

5. யோக நூலாகவும் பக்தி நூலாகவும் தத்துவ இலக்கியமாகவும் போற்றப்படுவது.
   1) சிவஞானபோதம் 2) பகவத் கீதை 3) திருமந்திரம்
   4) மகாபாரதம் 5) இராமாயணம்

6. ஆணவத்தின் அழிவைக் குறிக்கும் புராணக் கதை
   1) கஜமுக சங்காரம் 2) நரகாசூர சங்காரம் 3) யம சங்காரம்
   4) மகிஷாசூரசங்காரம் 5) சூரன் போர்

7. தனது திருமுடியில் உருத்திராட்சத்திலான மகா சிவலிங்கத்தைத் தரித்தவன்.
   1) பரமேசுவர வர்மன் 2) நரசிம்ம வர்மன் 3) மகேந்திர வர்மன்
   4) ஸ்கந்த வர்மன் 5) நந்தி வர்மன்

8. மெய் கண்ட சாத்திர நூல்களில் காலத்தினால் முந்திய நூல்கள்.
   1) சிவஞானபோதம், சிவஞான சித்தியார்
   2) திருவருட்பயன், உண்மை விளக்கம்
   3) வினா வெண்பா, கொடிக்கவி
   4) திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்
   5) உண்மைநெறிவிளக்கம், நெஞ்சுவிடுதூது

9. அம்மனுக்கு தனியான சந்நிதானம் அமைக்கப்பட்ட காலம்
   1) சங்ககாலம் 2) சங்கமருவிய காலம் 3) பல்லவர் காலம்
   4) சோழர் காலம் 5) விஜயநகர நாயக்கர் காலம்

agaram.lk

10. வகுப்புவாதம் மதபேதம் என்பவற்றை புறக்கனித்து ஒருமைப்பாட்டைப் பேணிய வட இந்திய பக்தி நெறியாளர்

1) கபீர்தாஸர் 2) துளசிதாசர் 3) இராமானந்தர் 4) ஸ்ரீசைதன்யர் 5) மீராபாய்

11. சோழர் காலத்தில் சிறப்பு பெற்ற படிமக் கலைகளில் ஒன்று

1) திரிபுராந்தகர் 2) நடராஜர் 3) வைரவர்
4) தட்சணா மூர்த்தி 5) லிங்கோற்பவர்

12. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற சோதிட நூல்

1) பரராச சேகரம் 2) சரசோதி மாலை 3) கைலாயமாலை
4) செகராச சேகரம் 5) கதிரை மலைப்பள்ளு

13. "முத்தி என்னளவில் நின்றுவிடும் ஆனால் எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதனால் வரும் இன்பமே ஒப்பற்றது" என்ற திடசித்தம் கொண்டவர்.

1) சுவாமி விபுலானந்தர் 2) ஆறுமுக நாவலார் 3) சுவாமி விவேகானந்தர்
4) சுவாமி இராம கிருஷ்ணர் 5) கா. அருணாசலதேகிகர்

14. கண்டன நூல்களை எழுதியமையால் "கிறிஸ்தவ கண்டன குடாரி" என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்.

1) காசிவாசி செந்திநாதையர் 2) ஆறுமுக நாவலர் 3) கா.அருணாசலதேசிகர்
4) சுவாமி விபுலானந்தர் 5) பேராசியர் கைலாசநாதக் குருக்கள்

15. சுந்தரமூர்த்தி நாயனாரால் பதிகம் பாடப்பட்ட ஈழத்து திருத்தலம்.

1) திருக்கோணேஸ்வரம் 2) நகுலேஸ்வரம் 3) முன்னேஸ்வரம்
4) 2ம் சிவாலயம் 5) திருக்கேதீஸ்வரம்

16. பத்துமலைக் கோயில் கோயில் அமைந்துள்ள இடம்.

1) சம்பா 2) கம்போடியா 3) மலேசியா 4) ஜாவா 5) தாய்லாந்து

17. "சிற்பக்கலைக் களஞ்சியம்" என சிறப்பிக்கப்படும் ரதக் கோயில்

1) வீமரதம் 2) தருமராஜரதம் 3) அர்ச்சுனரதம்
4) நகுலரதம் 5) சகா தேவரதம்

18. நிலையாக ஓரிடத்தில் நிறுவப்படும் விக்கிரகங்களை எவ்வாறு அழைப்பர்

1) சல விக்கிரகம் 2) செம்பு விக்கிரம் 3) சலாசல விக்கிரகம்
4) அசல விக்கிரகம் 5) மர விக்கிரகம்

19. "குனித்த புருவமும் கொவ்வைச் செய்வாயிற்-------" என்ற பதிகத்தில் வருணிக்கப்படும் மூர்த்தம்

1) நடராஜ மூர்த்தம் 2) இலிங்கோற்பவ மூர்த்தம் 3) தட்சணாமூர்த்தம்
4) வைரவ மூர்த்தம் 5) திரிபுராந்தக மூர்த்தம்

20. பிரபஞ்சப் படைப்புக் கடவுளர்களாக விளங்கிய தேவர்கள்

1) வருணன், இந்திரன் 2) சோமன், அக்கினி 3) பிரஜாபதி, விஷ்வகர்மன்
4) சரஸ்வதி, விஷ்ணு 5) உருத்திரன், உஷை

21. உலக இருப்பை பரிணாமவாதம் மூலம் நிறுவியவர்.

1) இராமானுஜர் 2) சங்கரர் 3) ஸ்ரீ கண்டர் 4) பலதேவர் 5) மத்துவர்

22. கன்மம், மறுபிறப்பு பற்றிய விரிவான கருத்துக்களைக் கொண்டுள்ள வேதப் பாடல்கள்

1) நாசதீயசூக்தப் பாடல்கள் 2) வருணசூக்தப் பாடல்கள் 3) புருஷசூக்தப்பாடல்கள்
4) ரிதப் பாடல்கள் 5) யமசூக்தப்பாடல்கள்

agaram.lk

23. சைவசித்தாந்தத்தின் முதனூலாக கொள்ளப்படுவது.
1) திருவுந்தியார் 2) உண்மை விளக்கம் 3) சிவஞான போதம்
4) திருவருட்பயன் 5) சிவஞானசித்தியார்

24. சிவஞான போதத்தின் சார்பு நூல்.
1) சிவஞான சித்தியார் 2) உண்மை விளக்கம் 3) வினா வெண்பா
4) சிவப்பிரகாசம் 5) கொடிக்கவி

25. ஆச்சிரம தர்மங்களில் முற்றுந் துறந்த நிலை எனப்படுவது
1) பிரமச்சரியம் 2) கிருஹஸ்தம் 3) சந்நியாசம்
4) வானப்பிரஸ்தம் 5) காட்டில் வசிக்கும் நிலை

26. உலக தத்துவங்களில் சிவ தத்துவங்கள் எத்தனை.
1) 05 2) 07 3) 36 4) 24 5) 04

27. கன்மத்தை அனுபவிக்கும் போது செய்யும் புதிய வினைகளை எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.
1) சஞ்சிதம் 2) வெறுவினை 3) பரநிந்தை
4) பிராரத்துவம் 5) ஆகாமியம்

28. உலகும், உயிரும் நிலை பெற இறைவன் அவசியம் என விளக்குவர்
1) சங்கரர் 2) இராமானுஜர் 3) மத்துவர்
4) ஸ்ரீகண்டர் 5) மெய்கண்டார்

29. பிரஸ்தானத்திரயங்களுள் ஒன்றாக கொள்ளப்படுவது.
1) சிட்சை 2) யோக சூத்திரம் 3) உத்தரமீமாம்ச சூத்திரம்
4) சாங்கியம் 5) வைசேடியம்

30. இறைவனும் ஆன்மாவும் ஒருபோதும் ஒன்று என்ற நிலையை அடைவதில்லை என்ற சிந்தனை உடையவர்.
1) சங்கரர் 2) இராமானுஜர் 3) மத்துவர் 4) நீலகண்டர் 5) வல்லபர்

31. தமிழ்மறை,உலகப் பொதுமறை,தெய்வநூல் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுவது.
1) வேதம் 2) நல்வழி 3) ஆகமம் 4) திருக்குறள் 5) ஆத்திசூடி

32. விலங்குகள் பறவை போன்ற உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு.
1) பூதயக்ஞம் 2) பிதிர்யக்ஞம் 3) மானிடயக்ஞம்
4) தேவயக்ஞம் 5) பிரமயக்ஞம்

33. ‘நடுகல் வழிபாடு சிறப்புற்ற காலம்.
1) பல்லவர் காலம் 2) மௌரிய காலம் 3) குப்தர் காலம்
4) தற்காலம் 5) சங்க காலம்

34. பிற்கால நீதிபரிபாலனங்களுக்கு முன்னோடியாக அமைந்தவை.
1) ஆச்சிரம தர்மங்கள் 2) வருண தர்மங்கள் 3) தர்ம சாத்திரங்கள்
4) புருடாத்தங்கள் 5) இதிகாசங்கள்

35. மாமல்லபுரக் கலைக்கூடத்தை அமைத்தவன்.
1) மாமல்லன் 2) நந்தி வர்மன் 3) நரசிம்மவர்மன்
4) குமார விஷ்ணு 5) சிம்ம வர்மன்

36. “வேதசாரம்’ என அழைக்கப்படுவது.
1) ஆகமங்கள் 2) வேதங்கள் 3) உபநிடதங்கள்
4) தேவாரங்கள் 5) திருமந்திரம்

agaram.lk

37. கல் நந்தி புல் உண்ட சிறப்புக்குரிய திருத்தலம்.
1) கொக்கொட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் 2) முன்னேஸ்வரம்
3) திருக்கேதீஸ்வரம் 4) 2ம் சிவாலயம்
5) 5ம் சிவாலயம்

38. தயானந்தர் "சுத்தி', "சங்கடனம்" என்ற இயக்கத்தை தாபிப்பதற்கு அடிப்படையாக அமைந்தது.
1) காந்தீயம் 2) விவேகானந்த சபை 3) ஆரிய சமாஜம்
4) பிரம சமாஜம் 5) இராம கிருஷ்ண மிஷன்

39. வேத ஆகம கல்வி மரபுகள் காஞ்சி கடிகைஸ்தானம் மூலம் பரவிய காலம்.
1) சங்க காலம் 2) பல்லவர் காலம் 3) நாயக்கர் காலம்
4) சோழர் காலம் 5) சங்கமருவிய காலம்

40. "தென் திசைமேரு" என சிறப்பிக்கப்படும் ஆலயம்.
1) மூவர் கோயில் 2) முத்தீஸ்வர் கோயில்
3) கங்கை கொண்ட சோழேஸ்வரம் 4) மதங்கேஸ்வரர் கோயில்
5) தஞ்சைப் பெருவுடையார்.

❖ **இலக்கம் 41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குரிய பொருத்தமானவற்றை அட்டவணையிலிருந்து தெரிவு செய்க.**

A தவம்	B சிவன்	C இராஜராஜேஸ்வரம்	D குணபரஈச்சரம்	E தர்மம்
F தேவதானம்	G விரதம்	H உலோகச் சிற்பங்கள்	I நாதம்	J காமம்
K பொருள்	L விந்து	M தலயாத்திரை	N நாயன்மார் படிமங்கள்	O ரதக்கோயில்கள்
P மோட்சம்	Q திருவிடையாட்டம்	R சதுர்வேதி மங்கலம்	S தீர்த்தம்	T சக்தி

41. புராணங்கள் கூறும் சமய வழிபாட்டு மரபோடு தொடர்புடைய தொகுதி.
1) B, G, L, Q 2) A, G, M, S 3) G, M, P, T
4) A, K, O, S 5) E, H, O, R

42. பொலனறுவைக்கால இந்துசமய வரலாற்றோடு தொடர்புடைய தொகுதி.
1) C, R, Q, T 2) F, L, N, S 3) H, K, O, T
4) A, F, P, S 5) C, H, N, R

43. சைவசித்தாந்தம் குறிப்பிடும் அருவத்திருமேனிகள் கொண்ட தொகுதி.
1) B, I, L, T 2) I, L, Q, R 3) B, I, M, R
4) D, I, P, Q 5) A, C, O, Q

44. பல்லவர் கால இந்துப் பண்பாட்டோடு தொடர்புடைய தொகுதி.
1) B, D, J, Q 2) A, H, N, T 3) D, F, O, Q
4) F, O, P, S 5) D, F, L, O

45. மனிதனால் அடையப்பட வேண்டிய செல்வங்கள் அடங்கும் தொகுதி.
1) A, F, L, S 2) C, F, N, O 3) E, F, R, T
4) E, J, K, P 5) J, L, O, S

agaram.lk

❖ **46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

46. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பணிகள்
    1) கஞ்சித் தொட்டித் தருமம் மேற்கொண்டமை.
    2) பத்திரிகைத்துறை வளர்ச்சியுற வித்திட்டமை.
    3) புராண படனங்கள் நிகழ்த்தியமை.
    4) ஆலயத்தில் நடனமாடும் மரபை எதிர்த்தமை.
    5) வித்தியாசாலைகள் அமைப்பதினை எதிர்த்தமை.

47. இந்துக் கலைக் கோட்பாடு.
    1) கலைகள் மனித வாழ்வை வளம்படுத்துகின்றன.
    2) அழகு, ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றைக் கொண்டிருப்பதில்லை.
    3) தூய உளச் செயற்பாடாகும்.
    4) கலை ஆத்மீக அனுபவத்தை தருகின்றது.
    5) இந்துக் கலைகள் கோயில் வளர்ந்த கலையாகும்.

48. பல்லவர் கால தர்மராஜ ரதம்.
    1) சிற்பக்கலைக் களஞ்சியம் என போற்றப்படுகின்றது.
    2) திராவிட அமைப்பைப் பின்பற்றியது.
    3) மூன்று தளங்களைக் கொண்டது.
    4) மலைகளைக் குடைந்து அமைக்கப்பட்டது.
    5) நரசிம்மன் பாணியில் அமைந்தது.

49. இராமனனுஜரின் விசிட்டாத்வைதம்.
    1) உலகு, உயிர் நிலைபெற இறைவன் அவசியம் என்கின்றார்.
    2) உலக இருப்பை பரிணாம வாத மூலம் நிறுவுகின்றார்.
    3) பிரமமே உண்மை ஏனைய உயிர், உலகம் அதன் தோற்றம் என்கின்றார்.
    4) மூன்று பொருளும் உண்மை என்கின்றார்.
    5) அப்பிரதசித்திக் கொள்கையை விளக்குகின்றார்.

50. வட இந்தியப் பக்தி நெறியாளர்களின் பொதுப் பண்புகள்.
    1) சிவனை பரம் பொருளாகக் கொண்டவர்கள்.
    2) பக்தி மார்க்க மூலம் விடுதலை பெறலாம் என்ற கொள்கை உடையவர்கள்.
    3) நாம சங்கீர்த்தன முறையைப் பின்பற்றுபவர்கள்.
    4) கிரியை, சடங்குகள் போன்றவற்றை விடவும் பக்தி மேலானது என்ற கொள்ளை உடையவர்கள்.
    5) பக்தி ரசம், பக்தி உணர்வு ததும்பும் பாடல்களை பாடுகின்றவர்கள்.

(50 x 2 = 100 புள்ளிகள்)

agaram.lk

FWC

வடமாகாணக்கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2019

Term Examination, March - 2019

தரம் :- 13 (2019)	இந்து நாகரிகம்	நேரம் :- மூன்று மணித்தியாலம்

பகுதி II

- **பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும்**
- **பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பகுதி I

1) இந்து நாகரிகத்தின் முதல் நூல் என்ற வகையில் வேதங்கள் பெறும் சிறப்பினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.
   அ) இந்திரன்
   ஆ) சமய நெறிகள்
   இ) கடவுள் கோட்பாடு
   ஈ) சமுதாய கருத்துக்கள் (5 x 4 = 20 புள்ளிகள்)

2) இந்து தத்துவ மரபில் இராமானுஜரது விசிட்டாத்வைதம் பெறும் சிறப்பினை மேல்வரும் அம்சங்களில் ஆராய்க.
   அ) விசிட்டாத்துவைதம் என்பதன் பொருள் விளக்கம்.
   ஆ) பரம்பொருட் கொள்கை
   இ) ஆன்மாவுக்கும் பரம்பொருளுக்கும் இடையான தொடர்பு.
   ஈ) முத்தி பற்றிய சிந்தனை (5 x 4 = 20 புள்ளிகள்)

3) ஈழத்து இந்துசமய வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.
   அ) வரலாற்று மூலங்கள்.
   ஆ) பௌத்த சமய மரபுகளும் இந்து சமயமும்.
   இ) மன்னர்களும் இந்து சமயத்தொடர்பும்.
   ஈ) பொலனறுவைக் கால கோயில்களும் சிற்பங்களும். (5 x 4 = 20 புள்ளிகள்)

பகுதி II

4) சைவ சித்தாந்தம் விளக்கும் பதியின் உண்மைத் தன்மையினையும் இலக்கண இயல்புகளையும் விளக்கிக் கூறுக. (20 புள்ளிகள்)

5) பல்லவர் காலக் கட்டடக்கலை வளர்ச்சி பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)

6) இந்து சமூக சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாகிய பிரம சமாஜத்தின் பணிகளை விளக்குக. (20 புள்ளிகள்)

7) மனித வாழ்வை மேம்படுத்தும் புருடாத்தங்களின் சிறப்பினை விளக்கி ஆராய்க. (20 புள்ளிகள்)

8) இந்துப் பண்பாட்டில் இசைக்கலை பெற்றுள்ள முக்கியத்துவத்தினை விளக்கி ஆராய்க. (20 புள்ளிகள்)

agaram.lk